**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**சுருக்குப் பட்டிகை வழக்கு எண். 7/2025.**

**வழக்கு சாட்சி – அ.சா. 8 (பட்டியல் சாட்சி –9)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முருகன். | ஜாதி | |
| தந்தை பெயர் | முத்தையா. | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் (பணி ஓய்வு). |
| கிராமம் | தேனி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 62/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து, தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் தேனி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, கடந்த 23.08.2021 ஆம் தேதியன்று, பகல் 12.00 மணிக்கு தேனி காவல் நிலைய மனு ரசீது எண். 632/2021 –ஐப் பார்வையிட்டு, மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரின் தன்மைக்கேற்ப தேனி காவல் நிலையக் குற்ற எண். 926/2021 மற்றும் சட்டப் பிரிவுகள் 279 இ.த.ச உ/இ. 132, 177, 184 M.V. Act– இன் கீழ் வழக்குப் பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. புகாரி மனுவின் அசலையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் தேனி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், அதன் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே, 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சாட்சிகள் முருகன் மற்றும் இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில் 13.00 மணி முதல் 14.15 மணி வரை மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து கையெழுத்துப் பெற்று, அவர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம்**

**அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகின்றன**. பின்னர், சாட்சிகள் குபேந்திரன், தொட்டியப்பன், திருக்கண்ணன் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், கடந்த 25.08.2021 ஆம் தேதி, காலை 10.00 மணிக்கு நிலையத்தில் வைத்து, எதிரி பிரபாகரன் என்பவரை கைது செய்தும், தக்க ஜாமீனில் அவரை விடுவித்தேன். விபத்திற்குள்ளான வாகனங்களான TN 60 E 4437 என்ற பதிவெண் கொண்ட லாரியும் மற்றும் TN 84 F 3547 என்ற பதிவெண் கொண்ட மாருதி டிசைர் என்ற வாகனத்தை வாகன ஆய்வுக்காக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தேன். கடந்த 05.10.2021 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுரேஷ் விஸ்வநாத் என்பவரை விசாரித்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்படுகின்றன**. பின்னர் இவ்வழக்கில் மனு ரசீது பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் என்பவரை 05.10.2021 ஆம் தேதி விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர், அன்றைய தினமே எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279 இ.த.ச உ/இ. 132, 177, 184 M.V. Act கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கில் விபத்திற்குள்ளான காரில் சேதமான பகுதியை புகைப்படம் எடுத்தேனா? என்றால், இல்லை. விபத்திற்குள்ளான கார் யாருடைய பெயரில் உள்ளது என்றால், குபேந்திரன் என்பவரின் பெயரில் உள்ளது. விபத்திற்குள்ளான லாரி யாருடைய பெயரில் உள்ளது என்றால், சில்லமரத்துப் பட்டியைச் சேர்ந்த சித்திரகுமார் என்பவரின் பெயரில் உள்ளது. மேற்படி விபத்திற்குள்ளான வானங்களின் R.C. புக்கின் அசலை கைப்பற்றி, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா? என்றால், இல்லை. மேற்படி வாகனங்களைக் கைப்பற்றி, உரிய ஆவணங்கள் பெற்றுக்கொண்டு, அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தேன் என்பதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா?

என்றால், இல்லை. ரசீது கொடுக்கப்பட்ட வாகன விபத்தை குற்ற வழக்காக மாற்றுவதற்கு முன்பாக, எங்களது காவல் நிலைய காவல் ஆய்வாரிடம் அனுமதி பெற்றுள்ளேனா? என்றால், இல்லை. சம்பவம் நடந்த நாள் 21.08.2021 முதல் கடந்த 05.10.2021 ஆம் தேதி வரை மோட்டார் வாகன ஆய்வாளர் முன்பு ஆஜர்படுத்துவதற்கு முன்பு, மேற்படி விபத்திற்குள்ளான வாகனங்கள் யாருடைய கைவசத்தில் இருந்தது என்றால், 01.09.2021 ஆம் தேதியன்றே மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்படி வாகனங்களை ஆய்வு செய்துவிட்டார். கடந்த 21.08.2021 நாள் முதல் 01.09.2021 ஆம் தேதி வரையில் மேற்படி விபத்திற்குள்ளான வாகனங்கள் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தன என்றால், காவல் நிலையத்தில் இருந்தன. மேற்படி காவல் நிலையத்தில் இருந்ததற்கான ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். கடந்த 01.09.2021 ஆம் தேதியன்று வாகனங்கள், அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்தற்கான அறிக்கை எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் மேற்படி விபத்திற்குள்ளான வாகங்களின் சேதம் குறித்து குறிப்பிடபட்டுள்ளதா? என்றால், குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், சேதத்தின் அளவுகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். எதிரி, பொதுமக்களுக்கு இடைஞ்சலாக வாகனத்தை இயக்கிவந்தார் என்று கூறும்நிலையில், பொதுமக்களிடமிருந்து வாக்குமூலம் எதுவும் பெற்றுள்ளேனா? என்றால், இல்லை. அதிவேகமாகவும் என்பதற்கு வரையறை எதுவும் உள்ளதா? என்றால், இல்லை. 2021 ஆம் ஆண்டில் சாலை மேம்பாட்டுப் பணிக்காக மேம்பாலப் பணிக்காக பள்ளங்கள் தோண்டி வைக்கப்பட்டிருந்தது என்றால், இல்லை. சம்பவயிடத்திற்கு அருகில், ரயில்வே கேட்டிற்கு அருகாமையில் புதிய பேருந்து நிலையத்திற்குச் செல்லும் வழியில் காவல் துறையினர் கண்காணிப்பு அறை உள்ளது என்று சொன்னால், சரிதான். அங்கிருந்த காவலர்களை நான் விசாரித்தேனா? என்றால், அங்கு காவலர்கள் யாருமில்லை. எதிரிமீது மிகைப்படுத்தி சரிவர விசாரிக்காமல், சட்ட ரீதியாக பதிவு செய்யாத ரசீதின் அடிப்படையில், வாகன விபத்தை உரிய முறையில்

விசாரிக்காமல், எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, குற்ற இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.16 17:54:13 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**